

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

6-ஆம் திருமொழி - நாவலம்

_______*________

* நாவலம்பெரியதீவினில்வாழும்
நங்கைமீர்கள்! இதுஓரற்புதம்கேளீர் *
தூவலம்புரியுடையதிருமால்
தூயவாயில்குழலோசைவழியே *
கோவலர்சிறுமியர்இளங்கொங்கை
குதுகலிப்ப உடலுளவிழ்ந்து * எங்கும்
காவலும்கடந்துகயிறுமாலையாகி
வந்துகவிழ்ந்துநின்றனரே. (1)

இடவணரைஇடத்தோளொடுசாய்த்து
இருகைகூடப்புருவம்நெரிந்தேற *
குடவயிறுபடவாய்கடைகூடக்
கோவிந்தன்குழல்கொடுஊதினபோது *
மடமயில்களொடுமான்பிணைபோலே
மங்கைமார்கள்மலர்க்கூந்தல்அவிழ *
உடைநெகிழஓர்கையால்துகில்பற்றி
ஒல்கியோடரிக்கணோடநின்றனரே. (2)

வானிளவரசுவைகுந்தக்குட்டன்
வாசுதேவன்மதுரைமன்னன் * நந்த
கோனிளவரசுகோவலர்குட்டன்
கோவிந்தன்குழல்கொடுஊதினபோது *
வானிளம்படியர்வந்துவந்தீண்டி
மனமுருகிமலர்க்கண்கள்பனிப்ப *
தேனளவுசெறிகூந்தலவிழச்
சென்னிவேர்ப்பச்செவிசேர்த்துநின்றனரே. (3)

தேனுகன்பிலம்பன்காளியனென்னும்
தீப்பப்பூடுகள்அடங்கஉழக்கி *
கானகம்படிஉலாவியுலாவிக்
கருஞ்சிறுக்கண்குழலூதினபோது

மேனகையொடுதிலோத்தமைஅரம்பை
உருப்பசியரவர்வெள்கிமயங்கி *
வானகம்படியில்வாய்திறப்பின்றி
ஆடல்பாடலவைமாறினர்தாமே. (4)

முன்நரசிங்கமதாகிஅவுணன்
முக்கியத்தைமுடிப்பான், மூவுலகில்
மன்னரஞ்ச * மதுசூதனன்வாயில்
குழலினோசை செவியைப்பற்றிவாங்க *
நன்னரம்புடையதும்புருவோடு
நாரதனும்தம்தம்வீணைல்மறந்து *
கின்னரமிதுனங்களும்தம்தம்
கின்னரம் தொடுகிலோமென்றனரே. (5)

செம்பெருந்தடங்கண்ணந்திரள்தோளன்
தேவகிசிறுவந்தேவர்கள்சிங்கம் *
நம்பரமன்இந்நாள்குழலூதக்
கேட்டவர்கள் இடருற்றனகேளீர் *
அம்பரம்திரியும்காந்தப்பரெல்லாம்
அமுதகீதவலையால்சுருக்குண்டு *
நம்பரமன்றென்றுநாணிமயங்கி
நைந்துசோர்ந்துகைமறித்துநின்றனரே. (6)

புவியுள்நான்கண்டதோரற்புதம்கேளீர்
பூணிமேய்க்கும்இளங்கோவலர்கூட்டத்து
அவையுள் * நாகத்தணையான்குழாலூத
அமரலோகத்தளவும்சென்றிசைப்ப
அவியுணாமறந்துவானவரெல்லாம்
ஆயபாடிநிறையப்புகுந்துஈண்டி *
டெவியுணாவின்சுவைகொண்டுமகிழ்ந்து
கோவிந்தனைத்தொடர்ந்துஎன்றும்விடாரே. (7)

சிறுவிரல்கள்தடவிப்பரிமாறச்
செங்கண்கோடச்செய்யவாய்கொப்பளிப்ப *
குறுவெயர்ப்புருவம்கூடலிப்பக்
கோவிந்தன்குழல்கொடுஊதினபோது *
பறவையின்கணங்கள்கூடுதுறந்து
வந்துசூழ்ந்துபடுகாடுகிடப்ப *
கறவையின்கணங்கள்கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே. (8)

திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன்
டெங்கமலமலர்சூழ்வண்டினம்போலே *
சுருண்டிருண்டகுழல்தழ்ந்தமுகத்தான்
ஊதுகின்றகுழலோசைவழியே *
மருண்டுமான்கணங்கள்மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லும்கடைவாய்வழிசோர *
இரண்டுபாடும்துலுங்காப்புடைபெயரா
எழுதுசித்திரங்கள்போலநின்றனவே. (9)

கருங்கண்தோகைமயில்பீலியணிந்து
கட்டிநன்குடுத்தபீத்கவாடை *
அருங்கலவுருவினாயர்பெருமான்
அவனொருவன்குழலூதினபோது *
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும்
மலர்கள்வீழும்வளர்கொம்புகள்தாழும் *
இரங்கும்கூம்புந்திருமால்நின்றநின்ற
பக்கம்நோக்கி அவைசெய்யுங்குணமே. **(10)**

* குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக்
கோவிந்தனுடையகோமளவாயில் *
குழல்முழைஞ்சுகளினூடுகுமிழ்த்துக்
கொழித்திழிந்தஅமுதப்புனல்தன்னை *
குழல்முழவம்விளம்பும்புதுவைக்கோன்
விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார் *
குழலைவென்றகுளிர்வாயினராகிச்
சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. **(11)**

அடிவரவு : நாவலம் இட வான் தேனுகன் முன் செம் புலியுள் சிறு திரண்டு கருன் குழல் ஐய.